# <u>Sub Court, Eraniel</u>

O.S. No.33/2018
Date: 08.06.2026.
DW2 - திரு. பச்சைமால்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு தற்பொழுது கண்பார்வை தெரியாது என்றால், ஆமாம். சப்தத்தை வைத்து தான் பதில் சொல்வேன். சுமார் எத்தனை வருடங்களாக எனக்கு கண்பார்வை தெரியாது என்றால், 4 வருடங்களாக தெரியாது. நிரூபண வாக்குமூலத்தை நான் நேரடியாக படித்து பார்க்கவில்லை. ஆமாம் மகன் படித்து பார்த்து சொன்னார். எந்த தேதியில் எங்கு வைத்து என் மகன் என்னிடம் படித்து காண்பித்தார் என்றால், தேதி ஞாபகம் இல்லை. வழக்கறிஞர் அலுவலகத்தில் வாங்கி என் வீட்டில் வைத்து தான் மகன் படித்து சொன்னார். முதல் விசாரணையில் அவ்வாறு சொல்லியிருக்கிறேனா என்றால், இல்லை. பிரமாண பத்திரத்தில் எப்படி கையொப்பம் செய்தேன் என்றால், என் மகன் இந்த இடத்தில் கையொப்பம் செய்ய சொன்னார். அதன் அடிப்படையில் கையொப்பம் போட்டேன். வீட்டில் வைத்து கையொப்பம் செய்த பிரமாண பத்திரம் தாக்கல் செய்தேனா, அல்லது வேறு பத்திரம் தாக்கல் செய்தேனா என்று எனக்கு தெரியாது என்றால், நான் கையொப்பம் செய்த பத்திரம் தான் தாக்கல் செய்தேன். எதன் அடிப்படையில் வீட்டில் வைத்து கையொப்பம் செய்த பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்கிறேன் என்று சொல்கிறேன் என்றால், வழக்கறிஞர் கூறியதன் அடிப்படையில் தான் சொல்கிறேன். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்தார் என்று என்னால் படித்து பார்க்க இயலாது என்றால், அவர் தாக்கல் செய்யும் போது எனக்கு கண்பார்வை இருந்தது. அப்பொழுது நான் படித்து பார்த்தேன். வாதி வழக்கில் ஆரம்பத்தில் என்னை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், ஆமாம். வாதி வழக்கில் என்ன பரிகாரம் கேட்டிருக்கிறார் என்றால், வாதி சொத்தில் உரிமை வேண்டும் என்று கோருகிறார். ஆனால் அவருக்கு உரிமை கிடையாது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது என்று உறுதி செய்ய இயலாது என்றால், தவறு. வாதி 14 ஆவணங்கள் குறியீடு செய்திருப்பதை படித்து பார்த்தேனா என்றால், என் மகன் படித்து கூற கேட்டேன். நான் 4 ஆண்டுகளுக்கு முன்பு தான் கண்பார்வை தெரியாது என்று கூறி விட்டு 3 ஆண்டுகளுக்கு முன்பு தான் தானாக வந்து வழக்கில் தரப்பினராக சேர்க்க மனு செய்தேன் என்றால், ஆமாம்.

20.02.2026 தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணையில் கண் பார்வை தெரியவில்லை என்று சொல்லியிருக்கிறேன் என்றாலும், அதற்கு முன்பு நான் தாக்கல் செய்துள்ள மனுவில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், ஆமாம். முதல் விசாரணையில் பட்டியல் 1 மற்றும் 2 சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி இருப்பதற்கு அதை எப்படி பெற்றேன் என்ற ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால், தாக்கல் செய்திருக்கிறேன். சொத்தை நான் விலைக்கு வாங்கியதை காண்பிக்கவோ அல்லது எனது மூதாதையர் சொத்து என்பதை காண்பிக்கவோ ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால், தாக்கல் செய்திருக்கிறேன். சொத்து எனக்கு பாத்தியப்பட்டது எனபதை காண்பிக்க எந்த உரிமையியல் ஆவணமும் காண்பிக்கவில்லை என்றால், தவறு. மேல் முறையீட்டு வழக்கு எண் AS.57/81 தீர்ப்புரை தாக்கல் செய்திருக்கிறேன். விலைப்பத்திரங்கள் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால், இல்லை. நான் பிரமாண வாக்குமூலத்தில் 50 வருடங்களாக சொத்தை கைவசம் வைத்து அனுபவித்து வருகிறேன் என்று சொல்லியிருப்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால், ஆவணம் தாக்கல் செய்யவில்லை ஆனால் என் கைவசம் இருக்கிறது. வரி ரசீதுகள் எல்லாம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். நான் மண்டைக்காடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அழகன் பாறை கூட்டுறவு வங்கி தொடர்பான குற்ற வழக்கில் நான் எதிரியாக இருக்கிறேன் என்றால், ஆமாம். அந்த வழக்கு CC.393/2003 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் 6 ஆண்டுகளுக்கு சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது என்றால், ஆமாம்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டு கோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.